LIBRARY, STATE LEGISLATURE
20 JUL 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 29th February 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past-eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Irrigation Tanks in Inam villages

* 116 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Home be pleased to state the action taken by the Government so far, for repairing and restoring the irrigation tanks in the un-abolished Inam villages in the State?

THE HON. SRI P. KAKKAN: Repairs and restoration of such irrigation tanks will be considered after the Inam villages are taken over by the Government.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், அதுவரையில் விவசாயம் பாதிக்கப் படுகிறது, உற்பத்தி குறைகிறது. ஆகவே அந்த ஏரிகளை அரசாங்கமே எடுத்து உடனடியாக மராமத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, இது சம்பந்தமாக மசோதா இந்தச் சபையால் நிறைவேற்றப் பட்டு ஜனாதிபதியின் சம்மதமும் கொடுக்கப் பட்டு விட்டது. இனி அது சம்பந்தமாகச் செய்ய வேண்டிய சடங்குகள் செய்தான பிறகு மற்றவைகள் கவனிக்கப்படும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நாம் புதிதாகக் கொண்டு வந்திருக்கிற சட்டம் புதிய இனாம்கள் சம்பந்தப் பட்டவை. புதிய, பழைய இனாம்களில் இருக்கும் கண்மாய்கள் பல நாட்களாகப் பழுது பார்க்கப்படவில்லை; அவற்றை என்றைக்கு நிச்சயமாகச் சர்க்கார் எடுத்துக் கொள்வார்கள் என்று தெரியாது. ஆகவே உடனடியாக இனாம் கிராமங்களில் உள்ள கண்மாய்களை பழுதுப் பார்க்க உத்தரவு இடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களுக்குப் பதில் சொல்லும் போது அதைப்பற்றித்தான் சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எனக்குக் கிடைத்த தகவல் படி, சில கிராமங்களில் சட்டத்தை எதிர்பார்த்து, ஏரிகளை பட்டா நிலங்களாக மாற்றும் செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது

[29th February 1964

தான். ஆகவே, அதைத் தடுக்க அரசாங்கம் உத்தரவு போடுவார்களா? அந்த அந்த ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவு போட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை குளங்கள் இருக்கின்றன என்று விவரம் எடுக்க உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படிச் செய்யப்படுகிறதா என்று பரிசீலனை செய்யப்படும்.

திரு. செ. மாதவன் : என்னுடைய கேள்வி, சட்டம் வந்தபிறகு, ஒவ்வொரு கிராமங்களிலும் நோடிபிகேஷன் போடவேண்டும், அதன் பிறகு கிராமத்திலுள்ள கண்மாய்களை எடுத்துக் கொள்ள வேண்டும், அதற்குக் காலதாமதம் ஆகும் ஆகவே, இரும் பிராந்தியங்களில் உடனடியாகக் கண்மாய்களைப் பழுதுபார்க்க உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: முதலில் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்தபிறகு, அதைப் பற்றி யோசிக்க வேண்டும். அதற்குள்ளாக எப்படி எடுக்க முடியும்?

வெள்ளிப்பட்டி ஆற்றின் குறுக்கே அணை

*117 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கந்தர்வ கோட்டை தொகுதியில் உள்ள வெள்ளிப்பட்டி ஆற்றின் குறுக்கே சிறிய அணை ஒன்று கட்டப் பரிசீலனைகள் நடைபெற்றனவா?

(இ) ஆமெனில், அது எந்நிலையில் உள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) வெள்ளிப்பட்டி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) பரிசீலனையில் இருக்கின்றன.

(*a*) Yes.

(*b*) Plans and Estimates for the construction of an anicut across Vellipatti river are under examination of the Chief Engineer (Irrigation).

திரு. பி. முருகையன் : ஸார், இந்த வெள்ளிப்பட்டி அணைக் கட்டுக்கு அருகாமையில், கோபால்பட்டி ஆற்றில் ஒரு அணை கட்ட வேண்டியது அவசியமாக இருப்பதால், அதைச் செய்வதாக உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ கக்கன் : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.